வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை
උතුරු පළාතේ මාර්ගස්ථ මගී ප්‍රවාහන අධිකාරිය
NORTHERN PROVINCIAL ROAD PASSENGER TRANSPORT AUTHORITY

இல.45, றக்கா ஒழுங்கை சுண்டுக்குளி யாழ்ப்பாணம்
නො 45 රැක්කා පටුමග චුණ්ඩුක්කුලි,යාපනය
No.45, Racca Lane Chundukuli Jaffna

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எனது இல<br>මගේ අංකය<br>My No | NPRPTA/Pro-2022 | உமது இல<br>ඔබේ අංකය<br>Your No | | திகதி<br>දිනය<br>Date | 04-02-2023 |

## வடமாகாணத்தினுள் அடையாளப்படுத்தப்பட்ட பாதைகளில் பேருந்து வழியனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தேவையான தகைமைகளை கொண்டுள்ள பேருந்து உரிமையாளர்களிடம் இருந்து கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகளில் பேருந்து சேவைகளை வழங்குவதற்கான வழியனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு விலைமனு கோருகின்றது.

| இல | பாதை விபரம் | மீளளிக்க முடியாத வைப்பு | மீளளிக்கபட கூடிய வைப்பு |
|---|---|---|---|
| 01 | வெலிஓயா – முல்லைத்தீவு (நெலும்வெவ நெடுங்கேணி தண்டுவான் தண்ணீரூற்று ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 02 | நீர்வேலி - யாழ்ப்பாணம் (அச்செழு-புன்னாலைகட்டுவன் ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 03 | மல்லாவி - யாழ்ப்பாணம் (தென்னியங்குளம்,அம்பலப்பெருமாள்-அக்கராயன்-ஸ்கந்தபுரம்-கிளிநொச்சி ஊடாக) | 3000.00 | 10000.00 |
| 04 | இரணைஇலுப்பைக்குளம் - மடு (காக்கையன்குளம், முள்ளிக்குளம், விளாத்திக்குளம், பரசன்குளம் ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 05 | அம்பலவன்பொக்கணை – முல்லைத்தீவு (புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு, மாஞ்சோலை ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 06 | திருமுறிகண்டி – மல்லாவி (கொக்காவில்,புத்துவெட்டுவான்,ஐயன்குளம், தேறாகண்டல், துணுக்காய் ஊடாக) | 2000.00 | 5000.00 |
| 07 | முத்தையன்கட்டு – மாங்குளம் (ஒட்டிசுட்டான் ஊடாக) | 2000.00 | 5000.00 |

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் பின்வருமாறு

1. விண்ணப்பதாரி வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிச்சட்ட பிரமாணங்களுக்கு அமைவாக விண்ணப்பம் செய்தல் வேண்டும். அத்துடன் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களாவது வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதனை வாக்காளர் பட்டியல் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

2. விலைமனு கோரல் விண்ணப்பப்படிவங்களை 08.02.2023 ஆந் திகதி முதல் இல-45, றக்கா ஒழுங்கை சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் காலை 9:00 மணியில் இருந்து மாலை 3:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

3. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 01.03.2023ஆந் திகதி மாலை 3:00 மணிக்கு முன்னர் பெறுகைக்குழு தலைவர், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, இல-45, றக்கா ஒழுங்கை சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பாதை விபரம் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி திறத்தல்கள் அன்றைய தினம் பிற்பகல் 3.15 ற்கு இடம்பெறும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,
வடமாகாணம்.

அலுவலகம்/කාර්යාලය/Office
Phone: 021 221 5966
Fax:
e-mail: transportauthoritynp19@gmail.com

தலைவர்/සභාපති/Chairman
Phone: 021 2215967
Fax:
e-mail: transportauthoritynp19@gmail.com

பொது முகாமையாளர்/ප්‍රධාන කළමනාකරු/General Manager
Phone: 021 221 5961
Fax:
e-mail: transportauthoritynp19@gmail.com